


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 262 16.03.2026 MONDAY PANGUNI: 1 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 262 16.03.2026 திங்கள்கிழமை பங்குனி : 1 விலை : ரூ.5/–

# தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்.23ல் ஒரே கட்டமாக தேர்தல்

# “மே.4ல் வாக்கு எண்ணிக்கை”

சென்னை, மார்ச்.16–

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23 ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் டெல்லியில் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியதாவது: தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

வேட்புமனு தாக்கல் மார்ச் 30ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்.7 ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்.9ம் தேதி கடைசி நாள். புதுச்சேரியில் ஏப்ரல் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

தமிழகத்தில் 75,032 வாக்குச் சாவடிகள் உள்ளன. தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் மே 10 ஆம் தேதியுடன் சட்டப்பேரவைக்கான பதவிகாலம் முடிவடைகிறது. வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு சதவீதம் அறிவிக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்கள் இடம்பெறும் என ஞானேஷ்குமார் தெரிவித்தார்.




தமிழ்நாடு, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதியை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் ஆணையர்கள் இன்று புது டெல்லியில் அறிவித்தனர்.

இதன்படி தமிழகத்தில் ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு வெளியான நிலையில், தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

தேர்தலுக்கு தயாராகும் கூட்டணிகள்:

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் சில கட்சிகளுக்கு ஏற்கெனவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற கட்சிகளுடன் தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

அதிமுக பாஜக கூட்டணியும் தேர்தலுக்கு தயாராகி வருகிறது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தொடங்கி உள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து களத்தில் இறங்கியுள்ளார்.

### தமிழகம், புதுச்சேரி உட்பட 5 மாநில தேர்தல் தேதிகள் முழு விவரம்

### ஏப். 23ல் தமிழக தேர்தல்:

தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். வேட்புமனு தாக்கல் மார்ச் 30ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்.7ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்.9ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஏப். 9ல் புதுச்சேரி தேர்தல்:

புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். வேட்புமனு தாக்கல் மார்ச் 16ம் தேதி தொடங்கி மார்ச் 23ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 24ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற மார்ச் 26ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.



### ஏப். 9ல் அசாம் தேர்தல்:

அசாமில் மொத்தம் உள்ள 126 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். வேட்புமனு தாக்கல் மார்ச் 16ம் தேதி தொடங்கி மார்ச் 23ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 24ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற மார்ச் 26ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஏப். 4ல் கேரள தேர்தல்:

கேரளாவில் மொத்தம் உள்ள 140 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 4ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். வேட்புமனு தாக்கல் மார்ச் 16ம் தேதி தொடங்கி மார்ச் 23ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 24ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற மார்ச் 26ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஏப். 23, 29 தேதிகளில் மே. வங்க தேர்தல்:

மேற்கு வங்கத்தில் மொத்தம் உள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கு ஏப்ரல் 23ம் தேதி தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். முதல் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் மார்ச் 30ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 7ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்ரல் 9ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் இரண்டாம் கட்டமாக 142 தொகுதிகளுக்கு ஏப்ரல் 29ம் தேதி தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இரண்டாம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் ஏப்ரல் 2ம் தேதி தொடங்கி ஏப்ரல் 9ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 10ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்ரல் 13ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரியில் தேர்தல் விதிகள் அமல்

புதுச்சேரி, மார்ச்.16-

புதுச்சேரி சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2026, அறிவிப்பினை தொடர்ந்து தேர்தல் நன்னடத்தை விதிகள் 15.03.2026 முதல் புதுச்சேரியில் அமலுக்கு வந்துள்ளது மேலும், நேர்மையான மற்றும் வெளிப்படையான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள், கட்அவுட்டுகள் போன்றவற்றை, பொது மற்றும் தனியார் கட்டிடங்கள், சொத்துகள், வாகனங்கள், அரங்குகள்/கூடங்கள், போன்ற பொதுப்பார்வைக்கு உட்பட்ட இடங்களில், வைத்து புதுச்சேரியின் அழகினை கெடுக்காமல் பாதுகாத்திட வேண்டி இந்த மாவட்ட தேர்தல் நிர்வாகம், நகராட்சி, கொம்யூன் பஞ் சாயத்து, பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை ஆகிய துறைகளுடன் இணைந்து தீவிரமாக பணியாற்றி வருகிறது. மேலும், மேற்கூறிய சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள், கட்அவுட்டுகள் போன்றவைகளை பொது இடங்களில் வைப்பது என்பது தேர்தல் நன்னடத்தை படியும், புதுச்சேரி திறந்தவெளி (அழகின் சிதைவைத் தடுத்தல்) சட்டம்2010ன் படியும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே. மேற்கூறிய விளம்பரங்கள் செய்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதால், சுவர்விளம்பரம், போஸ்டர்கள் அல்லது பேனர்கள் கட்டவுட்டுகள் புதியதாக வைக்கவும், மற்றும் வாகனங்களில் அனுமதி இல்லாமல் கட்சிக் கொடிகள், விளம்பரங்கள் போன்றவற்றை வைக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளபோது, வாகனங்களில் அரசியல் சம்பந்தமான கொடிகள், ஸ்டிக்கர்கள், படங்கள், விளம்பரங்கள் போன்றவைகளை உபயோகப்படுத்துவதற்கு மாவட்ட தேர்தல் அதிகாரி / தேர்தல் நடத்தும் அதிகாரி / ஒற்றைச் சாளர மைய (Single Window Cell) அதிகாரியிடம் இருந்து முன் அனுமதி பெற வேண்டும் பொதுமக்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சியினர் மாவட்ட தேர்தல் துறையின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்

## வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலை நிறுத்த ஈரானுக்கு ஹமாஸ் வலியுறுத்தல்



காசா, மார்ச்.16-

‘அண்டை நாடுகளை (வளைகுடா நாடுகள்) இலக்கு வைப்பதை ஈரான் நிறுத்த வேண்டும். அதேவேளையில், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கு எதிராக தன்னைத் தற்காத்துக்கொள்ளும் உரிமை ஈரானுக்கு உள்ளது’ என பாலஸ்தீனிய இஸ்லாமிய இயக்கமான ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து ஹமாஸ் வெளியிட்ட அறிக்கையில், ‘அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல் நடவடிக்கைக்கு சர்வதேச விதிமுறைகள் மற்றும் சட்டங்களுக்கு இணங்க, சாத்தியமான அனைத்து வழிகள் மூலமும் பதிலடி கொடுக்கும் உரிமையை ஈரான் இஸ்லாமியக் குடியரசு கொண்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் அதேவேளையில், பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட அண்டை நாடுகளை (வளைகுடா நாடுகள்) இலக்கு வைப்பதைத் தவிர்க்குமாறு ஈரானில் உள்ள சகோதரர்களை எங்கள் இயக்கம் கேட்டுக்கொள்கிறது’ என்று தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேலுடன் இரண்டு ஆண்டுகள் நீடித்த, மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்திய போரை நடத்திய ஹமாஸ் இயக்கம், தற்போது நடைபெற்று வரும் இந்தப் போரை உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச சமூகத்தையும் வலியுறுத்தியது.

முன்னதாக, ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி போரில் கொல்லப்பட்டதை, ஹமாஸ் இயக்கம் ‘ஒரு கொடுமையான குற்றம்’ என்று கண்டித்தது. அந்த கண்டனத்தில், ‘எங்கள் மக்களுக்கும், எங்கள் நோக்கத்திற்கும், எங்கள் எதிர்ப்புப் போராட்டத்துக்கும் தேவையான அனைத்து வகையான அரசியல், ராஜதந்திர மற்றும் ராணுவ ஆதரவையும் அவர் வழங்கினார்’ என்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே இன்று 14 வது நாளாக போர் நீடித்துள்ளது. வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## அந்தமானில் ரூ.36,000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் அழிப்பு

விஜயபுரம், மார்ச்.16-

அந்தமான் தீவு அருகே கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி சென்ற மர்ம படகு ஒன்றை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து சோதனை செய்தனர்.

அதில் 1,500 பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை மெதாம்ஃபெட்டமின் போதைப் பொருள் என ஆய்வில் தெரிய வந்தது. 6,000 கிலோ எடையுடன் இருந்த இந்த போதைப் பொருளின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.36,000 கோடி. இதையடுத்து அந்த படகில் இருந்த மியான்மர் நாட்டைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் அந்தமான் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில், 6 ஆயிரம் கிலோ எடையுள்ள போதைப் பொருட்களை அழிக்கும் பணி காவல் துறை உயரதிகாரிகள் முன்னிலையில் தொடங்கின.

## கல்விக் கடனா? கல்வி உரிமையா?

### வியூகப் பார்வையில் ஒரு சமூக அலசல்!

தற்போது மகளிருக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ‘உரிமைத் தொகை’ போல, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் ‘கல்வி உரிமைத் தொகை’ எனும் புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தினால், அது தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் கல்விப் புரட்சியாக அமையும் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கல்விக் கடனா? கல்வி உரிமையா? :

கல்விக்கு நாம் வழங்கும் பணத்தை ‘கல்விக் கடன்’ என்கிறோம். மகளிருக்கு வழங்கும் பணத்தை ‘உரிமைத் தொகை’ என்கிறோம். ஆனால், கல்வியையே ஒரு ‘உரிமைத் தொகையாக’ அரசு மாற்றிவிட்டால், அதன் மூலம் உருவாக்கப்படும் அறிவுச்சமூகத்திற்குப் பின்னாளில் எந்தவொரு கையேந்தும் நிலை ஏற்படாது என்பதுதான் எதார்த்தம். உரிமைத் தொகையும் தேவைப்படாத அளவிற்கு, அவர்கள் அடுத்தவருக்கு உதவும் வல்லமை கொண்டவர்களாக மாறுவார்கள் என்பதுதான் சமூக ஆர்வலர்களின் ஒட்டுமொத்தப் பாசம் கலந்த ஆதங்கம்.




ஒரு புதிய சகாப்தம்:

கல்விக்கு வழங்கப்படும் நிதியை ‘கடன்’ என்றோ அல்லது ‘உதவி’ என்றோ அழைக்காமல், அது ஒரு மாணவனின் ‘உரிமை’ என்று அங்கீகரித்து, அந்த நிதியை மாணவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக ‘அட்வான்ஸ்’ ஆகவோ அல்லது சிறப்பு ஊக்கத் தொகையாகவோ வழங்கும் முறை நடைமுறைக்கு வந்தால், அது கீழ்க்கண்ட மாற்றங்களைக் கொண்டுவரும்:

பொருளாதாரச் சுமையின்மை:

கல்விக் கட்டணங்கள் மற்றும் புத்தகச் செலவுகளுக்காகப் பெற்றோர் கடன் வாங்கும் அவலம் முற்றிலும் ஒழியும்.

பாகுபாடற்ற கல்வி:

சமூகத்தின் கடைசி நிலையில் உள்ள ஏழை எளிய மாணவனும், தன்னுடைய கல்வி உரிமையை நேரடியாகப் பெறுவதால், கல்வி கற்பதில் அவனுக்குத் தனித்தன்மையும், தன்னம்பிக்கையும் பிறக்கும்.

நேரடிப் பயன்:

இடைத்தரகர்கள் இன்றி, அரசின் நிதி நேரடியாக மாணவனைச் சென்றடைவதால், கல்வித் துறையில் ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகம் மலரும்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுபவை ‘உதவி’ அல்ல, ‘உரிமைத் தொகை’ என்று அறிவிக்கப்படும்போது, அது மாணவர்களிடையே, “இந்த நிதியைத் தந்து, என்னை ஒரு மேதையாக உருவாக்க அரசு கடமைப்பட்டுள்ளது” என்ற உணர்வைத் தூண்டும். இது கல்விக்கான முதலீடாக மாறி, வருங்காலத்தில் வேலைவாய்ப்புகள் நிறைந்த, தற்சார்பு கொண்ட ஒரு தலைமுறையை உருவாக்கும்.

நிச்சயமாக, இத்தகைய ஒரு செயல்பாடு தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மையான கல்விச் சந்தையாகவும், அறிவுசார்ந்த சமூகமாகவும் மாற்றும் என்பது சமூக ஆர்வலர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது.

கல்வியை அரசு ஒரு சுமையாக்காமல், அடிப்படை உரிமையாக்கினால், அது ஒட்டுமொத்த சமூகத்தையும் தலைநிமிரச் செய்யும். கடனைத் தருவதை விட, கல்வியைத் தந்து அவர்களைத் தகுதியுள்ளவர்களாக மாற்றுவதே உண்மையான சமூக நீதியாகும்.

சமூகப் பொறுப்புடன்
சக்கர வியூகம்

# பழநியில் மின் இழுவை ரயில் சேவை பாதிப்பு : பக்தர்கள் தவிப்பு




பழநி, மார்ச்.16–

பழநி மலைக்கோயிலுக்கு செல்லும் மின் இழுவை (வின்ச்) ரயில்களுக்கு மின் வினியோகம் வழங்கும் இணைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணி முதல் வின்ச் ரயில் சேவை பாதித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலுக்கு பக்தர்கள் எளிதில் செல்லும் வகையில் 3 மின் இழுவை ரயில்கள் (வின்ச்) இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் அடிவாரத்தில் இருந்து மலைக்கோயிலுக்கு செல்ல ரூ.10 மற்றும் ரூ.50ம், மலைக்கோயிலில் இருந்து அடிவாரத்துக்கு ரூ.10 மற்றும் ரூ.25 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தினமும் காலை 5.30 முதல் இரவு 11 மணி வரை பக்தர்கள் மலைக்கோயிலுக்குச் செல்லவும், மலைக்கோயிலில் இருந்து அடிவாரத்துக்கு வரவும் இயக்கப்படுகிறது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு வழக்கம்போல் மின் இழுவை (வின்ச்) ரயில் சேவையை தொடங்கும் போது, இந்த ரயில்களை இயக்குவதற்கு மின் வினியோகம் வழங்கும் இணைப்பில் ஏற்பட்ட கோளாறு, மின் கசிவு காரணமாக மின் இழுவை ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

பொறியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் கோளாறை சரிசெய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். இதனால் பக்தர்கள் ரோப் கார் மற்றும் படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோயிலுக்கு செல்ல கோயில் நிர்வாகம் ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தியது.வார விடுமுறையையொட்டி, அதிகாலை முதலே பக்தர்களின் வருகை அதிகரித்து வருகிறது. மின் இழுவை ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் நடந்து செல்ல முடியாத முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், கைக்குழந்தையுடன் வரும் தாய்மார்கள் மற்றும் இதர பக்தர்கள் ரோப் காரில் 2 மணி நேரத்துக்கும் மேலாக காத்திருந்து மலைக்கோயிலுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.



# செம்பரம்பாக்கம் ஊராட்சியில் 100 சதம் வாக்களிக்க வலியுறுத்தி வீடு, வீடாக துண்டு பிரசுரங்கள்

திருவள்ளூர், மார்ச்.16–

தமிழ்நாட்டில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக பூந்தமல்லி சட்டமன்ற தொகுதியில் 426 வாக்குச்சாவடி மையங்களில் வாக்கு பதிவு நடைபெற உள்ளது. இந்த நிலையில், 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதிப்படுத்தும் வகையில் கிராமம் தோறும் மின்னணு வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கலை நிகழ்ச்சிகள், பேரணி நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் உத்தரவின்படி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார் மேற்பார்வையில், பூந்தமல்லி ஒன்றியம், செம்பரம்பாக்கம் ஊராட்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.) கோ.மகேஷ்பாபு, (கி.ஊ.) சுந்தராஜன் ஆகியோர் தலைமையில் வண்ண, வண்ண கோலம் வரைந்து உறுதிமொழியை எடுத்துக்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி வீடு, வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

இதில் உதவி செயற்பொறியாளர் மாரிச்செல்வம், துணை வட்டாட்சியர் அரிபாபு, சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் சிவானந்தம், ஊராட்சி செயலர் தேன்மொழி, தூய்மை காவலர்கள், தூய்மை பணியாளர்கள், ஊராட்சி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்



# மாதவிடாய் விடுமுறையை கட்டாயமாக்கினால் பெண்களுக்கான வேலைவாய்ப்பு பாதிக்கும்: உச்ச நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி, மார்ச்.16–

பெண்களுக்கு மாதவிடாய் விடுமுறையை கட்டாயமாக்கினால், பெண்களை யாரும் வேலைக்கு தேர்வு செய்ய மாட்டார்கள் என கருத்து தெரிவித்த உச்ச நீதிமன்றம், பொது நல மனுவை தள்ளுபடி செய்தது.

பெண்களின் மாதவிடாய் காலத்தில் விடுமுறை அளிப்பது தொடர்பாக சைலேந்திர மணி திரிபாதி என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அந்த பொதுநல மனுவில், மாதவிடாயின் போது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, மாதவிடாய் விடுப்புடன் கூடிய ஊதியமும், மாணவிகளுக்கு விடுமுறையும் அளிக்கும் கொள்கை மற்றும் உரிய சட்டங்களை வகுக்க மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் உத்தரவிட வேண்டும் என்று சைலேந்திர மணி திரிபாதி கோரியிருந்தார்.

இந்த மனுவை, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. மனுதாரர் தரப்பு மூத்த வழக்கறிஞர் எம்.ஆர். ஷம்சத் ஆஜராகி, மாதவிடாய் விடுப்பு அளிப்பது கர்நாடகம், ஒடிசா, கேரளத்தில் நடைமுறையில் உள்ளது என வாதிட்டார். அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

இந்த விவகாரத்தில் எந்தப் பெண்ணும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை. மாதவிடாய் விடுப்பு அளிக்க உரிமை கோருவது மகளிரின் வளர்ச்சிக்கு எதிரானதாக அமையும். தாமாக முன்வந்து விடுமுறை அளித்தால் அது நல்லது. ஆனால், மாதவிடாய் விடுமுறையை அளிப்பதை கட்டாயமாக்க கோரி சட்டம் இயற்றினால், மகளிருக்கான வேலைவாய்ப்பை பாதிக்கும்.

பெண்களை யாரும் வேலைக்கு தேர்வு செய்ய மாட்டார்கள். நீதித்துறை உள்ளிட்ட எத்துறையிலும் அவர்களுக்கு பணி வழங்கப்படாது. இந்த விவகாரத்தில் மனுதாரர் அளித்துள்ள கோரிக்கை தொடர்பாக உரிய அமைப்பு முடிவெடுக்க அனுமதி அளித்து இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறோம். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

# பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த எஸ்.பி. கைது வேலியே பயிரை மேய்வதாக அன்புமணி வேதனை



சென்னை, மார்ச்.16–

'பெண் காவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவல் கண்காணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார். வேலியே பயிரை மேய்ந்தால் தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு ஏது' என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கோவை புதூரில் உள்ள தமிழ்நாடு சிறப்புக்காவல் படையின் நான்காம் படைப்பிரிவில் பெண் காவலர்களுக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அதன் கட்டளையர் (கமாண்டண்ட்) செந்தில் குமார் கைது செய்யப்பட்டிருக்கிறார். பெண்கள் உள்ளிட்ட மக்களைக் காக்க வேண்டிய காவல் அதிகாரிகளே பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுப்பது கண்டிக்கத்தக்கது.

கண்காணிப்பாளர் நிலை அதிகாரியான செந்தில் குமார் மீது 45 வயது பெண் காவலரை பாலியல் வன்கொடுமை செய்தது உள்ளிட்ட பல புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றின் மீது விசாரணை நடத்துவதற்காக கடந்த பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இப்போது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவருக்கு உடந்தையாக இருந்த பெண் உதவி ஆய்வாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் இருந்து பாலக்காடு செல்லும் அரசுப் பேருந்தில் கோவைக்கு பயணிக்கும் போது பாலியல் தொல்லை கொடுத்த காவலரை கல்லூரி மாணவி ஒருவர் காலணியால் அடித்த நிகழ்வு நடந்திருக்கிறது. பெண்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடமாட வேண்டும் என்றால் அதற்கு காவல்துறை தான் கவசமாக இருக்க வேண்டும். ஆனால், வேலியே பயிரை மேய்வதைப் போல காவல்துறையினரே பாலியல் தொல்லை கொடுத்தால் பெண்கள் நடமாட முடியாத நிலை உருவாகி விடும். தமிழ்நாட்டில் இப்போது அதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் பாலியல் வன்கொடுமைகள் நடக்கின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்து விட்டது. இதற்கு காரணம் திமுக அரசின் செயலற்ற தன்மையும், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கட்டுப்படுத்தப்படாததும் தான். இதற்கெல்லாம் காரணமான திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தை புகட்டுவார்கள்.' எனத் தெரிவித்துள்ளார்.

# "பச்சிளம் குழந்தை முதல் பெண் காவலர் வரை யாருக்கும் பாதுகாப்பில்லை" நயினார் நாகேந்திரன்



சென்னை, மார்ச்.16–

'கோவையில் பெண் காவலரை மதுக்கரை சிறப்பு காவல்துறை கமாண்டண்ட் அதிகாரி பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளிவந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. தமிழகத்தில் பச்சிளம் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை. காவல் நிலையத்தில் காக்கிச் சட்டை அணிந்த பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கோவையில் காவல் நிலைய அலுவலக அறையில் வைத்தே பெண் காவலரை மதுக்கரை சிறப்பு காவல்துறை கமாண்டண்ட் அதிகாரி பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளிவந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

"வெல்லும் தமிழ்ப் பெண்கள்" என்று போலியாக முழங்கும் திமுக ஆட்சியின் நிர்வாகத் திறனின்மையால் தெருதோறும் காமுகர்கள் பெருகி வருவது ஒருபுறமிருக்க, மறுபுறம் காவல் அதிகாரிகளே காமுகர்களாக மாறிவருவது பெண்கள் பாதுகாப்பை ஒட்டுமொத்தமாகக் கேள்விக்குறியாக்குகிறது.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை! காவல் நிலையத்தில் காக்கிச் சட்டை அணிந்த பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை! தமிழகத்தின் வரலாற்றில் இப்படி ஒரு கொடூரத்தை இதுவரை யாரும் பார்த்ததும் இல்லை. இனி இந்தக் கேடுகெட்ட திமுக ஆட்சி தொடரப்போவதுமில்லை' என்றார்.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் போராட்டம்: கியூபாவில் அரசு அலுவலகங்கள் தீவைப்பு



மோரோன், மார்ச்.16–

கியூபாவில் நிலவும் கடும் மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டை கண்டித்து பொதுமக்கள் நடத்திய போராட்டம் பெரும் வன்முறையாக வெடித்துள்ளது. கியூபா நாட்டில் கடந்த 9ம் தேதியன்று ஹவானா பல்கலைக்கழக மாணவர்கள், மின்சாரம் மற்றும் இன்டர்நெட் வசதி இல்லாததால் வகுப்புகள் பாதிக்கப்படுவதை கண்டித்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகர் ஹவானாவின் பல்வேறு பகுதிகளில் இரவு நேரங்களில் பொதுமக்கள் தங்கள் வீடுகளின் பாத்திரங்களை தட்டி ஒலி எழுப்பி நூதன முறையில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில், மோரோன் நகரில் 13ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு, உணவுத் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டுக்கு எதிராக அமைதியான முறையில் தொடங்கிய பேரணி, நேற்று அதிகாலையில் பெரும் கலவரமாக மாறியது. ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் அங்குள்ள ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, அரசு அலுவலகத்தை முற்றுகையிட்டு கற்களை வீசித் தாக்கினர். பின்னர் கட்டிடத்திற்குள் புகுந்து அங்கிருந்த மேஜை, நாற்காலிகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் லேப்டாப் போன்றவற்றை தெருவில் வீசி தீயிட்டு கொளுத்தினர். இந்த வன்முறை தொடர்பாக 5 பேரை போலீசார் கைது செய்துள்ளதாக அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வெனிசுலாவில் கடந்த ஜனவரி மாதம் அதிபர் நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கியூபாவுக்கு வந்து கொண்டிருந்த எரிபொருள் விநியோகம் முற்றிலும் நின்று போனது. இதனால் அந்த நாட்டின் மின் உற்பத்தி நிலையங்கள் முடங்கி, தினமும் 20 மணி நேரம் வரை மின்வெட்டு நீடிக்கிறது. இதற்கிடையே எரிபொருள் தடையை நீக்குவது தொடர்பாக டிரம்ப் நிர்வாகத்துடன் கியூபா அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அந்நாட்டு அதிபர் மிக்வெல் டயஸ் கானெல் தெரிவித்துள்ளார்

# தேங்கிக் கிடக்கும் வழக்குகளை தீர்க்க மாற்று வழிகளை கையாள்வது அவசியம்: சுப்ரீம் கோர்ட் நீதிபதி கருத்து



புதுடெல்லி, மார்ச்.16–

இந்தியாவில் தேங்கிக் கிடக்கும் கோடிக்கணக்கான வழக்குகளைத் தீர்க்க மாற்று வழிமுறைகளை கையாள்வது அவசியமாகிறது. தேசிய நீதித்துறை தரவு கட்டமைப்பு வெளியிட்ட புள்ளி விபரங்களின்படி, இந்திய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 5 கோடியை நெருங்கியுள்ளது. இதில் சுமார் 3.9 கோடி குற்றவியல் வழக்குகளும், 1.1 கோடி சிவில் வழக்குகளும் அடங்கும். குறிப்பாக, இந்த ஆண்டு தொடக்க நிலவரப்படி, உச்ச நீதிமன்றத்தில் மட்டும் 92,000க்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் இருப்பது சாதனையாகக் கருதப்படுகிறது. இவ்வளவு வழக்குகள் தேங்கியிருப்பது நாட்டின் நீதி வழங்கும் கட்டமைப்பில் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.இந்திய செய்திகள்

இந்தச் சூழலில், நேற்று டெல்லியில் நடந்த சட்டச் சீர்திருத்தங்கள் குறித்த மாநாட்டில் பங்கேற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி என்.கோதீஸ்வர் சிங் பேசுகையில், 'இந்தியாவில் தேங்கிக் கிடக்கும் கோடிக்கணக்கான வழக்குகள் என்பது நாட்டின் 'சட்ட ஆரோக்கியத்தை' பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். மருத்துவ ரீதியாகப் பார்த்தால், நிலுவையில் உள்ள லட்சக்கணக்கான வழக்குகள் என்பது சமூகத்தின் நோய்க்குறிகளைப் போன்றது. வரும் 2047ம் ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய வேண்டுமானால், வழக்குகளை விரைந்து முடிப்பது மிக முக்கியமானது.

வர்த்தக ரீதியான பிரச்னைகளுக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வு காணும் முறையை இனிமேல் ஒரு மாற்றாக மட்டும் பார்க்காமல், முதன்மையான தீர்வாகக் கருத வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை சட்ட மாணவர்கள் மூல மந்திரமாக கொண்டு செயல்பட வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் திறன் ஆக்கபூர்வமான பணிகளுக்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, மனித மூளையின் சிந்தனைக்கு மாற்றாக இருக்கக் கூடாது' என்று தெரிவித்தார்.



# அந்தமானில் ரூ.36,000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் அழிப்பு

விஜயபுரம், மார்ச்.16–

அந்தமான் தீவு அருகே கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி சென்ற மர்ம படகு ஒன்றை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து சோதனை செய்தனர்.

அதில் 1,500 பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவை மெதாம்ஃபெட்டமின் போதைப் பொருள் என ஆய்வில் தெரிய வந்தது. 6,000 கிலோ எடையுடன் இருந்த இந்த போதைப் பொருளின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.36,000 கோடி. இதையடுத்து அந்த படகில் இருந்த மியான்மர் நாட்டைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் அந்தமான் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில், 6 ஆயிரம் கிலோ எடையுள்ள போதைப் பொருட்களை அழிக்கும் பணி காவல் துறை உயரதிகாரிகள் முன்னிலையில் தொடங்கின.

# ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குமாறு இந்தியாவிடம் கெஞ்சும் அமெரிக்கா: ஈரான் அமைச்சர் கிண்டல்

டெஹ்ரான், மார்ச்.16–

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என மிரட்டிய அமெரிக்கா, இப்போது வாங்கிக் கொள்ள இந்தியாவிடம் கெஞ்சுகிறது என ஈரான் அமைச்சர் கிண்டலாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்து முடங்கி எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்துமாறு இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் கடந்த சில மாதங்களாக மிரட்டி வந்தது.

ஆனால் ஈரானுடன் கடந்த 2 வாரங்களாக போரிட்டு வரும் அமெரிக்கா, இப்போது ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்குமாறு உலக நாடுகளை கெஞ்சி வருகிறது" என கூறியுள்ளார்.

மேலும், "ஈரானுக்கு எதிரான சட்டவிரோதப் போரை ஆதரிப்பதன் மூலம் ரஷ்யாவுக்கு எதிரான தங்கள் செயல்பாட்டுக்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெறலாம் என்று ஐரோப்பிய நாடுகள் நினைப்பது பரிதாபத்திற்குரியது" என்றும் அராக்சி பதிவிட்டுள்ளார்.

இந்தியா தொடர்ந்து ரஷ்ய எண்ணெய்யை வாங்குவது தவிர்க்க முடியாதது என்று அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசன்ட் விவரித்துள்ளார். மேற்கு ஆசிய போரால் ஏற்பட்ட எரிசக்தி தட்டுப்பாடுகளுக்கு மத்தியில், அவசரத் தேவை கருதியே இந்திய சுத்திகரிப்பு ஆலைகளுக்கு தற்காலிகமாக 30 நாள் விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.




# தமிழ்நாடுபுதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான திமுக வேட்பாளர் நேர்காணல் மார்ச் 17 முதல் 22 வரை நடைபெறும் என அறிவிப்பு

சென்னை, மார்ச்.16–

தமிழ்நாடுபுதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான திமுக வேட்பாளர் நேர்காணல் மார்ச் 17 முதல் 22 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக சார்பில் விருப்ப மனு அளித்தவர்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் நடத்துகிறார். மார்ச் 17ம் தேதி புதுச்சேரி, காரைக்காலுக்கான திமுக வேட்பாளர்களுக்கு நேர்காணல் நடைபெறுகிறது. மார்ச் 18ல் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, குமரியில் உள்ள தொகுதிகளுக்கான வேட்பாளர் நேர்காணல் நடைபெறுகிறது

# "இந்தத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை" வைகோ தகவல்



கோவில்பட்டி, மார்ச்.16–

"வரும் சட்டப்பேரவை தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை" என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இது தொடர்பாக கோவில்பட்டியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வேடநத்தத்தில் 12ம் வகுப்பு மாணவி பாலியல் நாசத்துக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதை நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

பாலியல் வன்கொலைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் முழுவதும் சிறையில் இருக்கும் வகையில், இந்த தேர்தலுக்கு பின்னர் அமையும் திமுக ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இதனை அரசியலாக்கி திமுக மீது சிலர் பழி தூற்ற முயற்சிக்கின்றனர். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இதனை விட அதிகமாக நடந்தது.

"வரும் தேர்தலுக்கு பிறகு முதல்வர் பதவியை ஸ்டாலின் இழந்து விடுவார்" என, பிரதமர் மோடி சில நாட்களுக்கு முன்பு கூறினார். ஆனால், 2029ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்குப் பின், இந்தியாவின் தலைமை அமைச்சர் நாற்காலியில் நரேந்திர மோடி உட்கார வாய்ப்பே கிடையாது. வரும் சட்டப்பேரவை தேர்தலில் நான் போட்டியிடப் போவது இல்லை. திமுகவில் மற்ற கூட்டணி கட்சிகளுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகுதான், மதிமுகவுக்கு என்னென்ன தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது தெரியும்.

ரஜினிகாந்த் நன்கு யோசித்துப் பார்த்து முன்கூட்டியே முடிவெடுத்துவிட்டார். புதிதாக கட்சி தொடங்கியவர்கள் கற்பனையாக ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் வலியுறுத்தியுள்ளது சரியான நடவடிக்கை. அப்படி நடந்தால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

# "கரூர் விவகாரத்தில் சிபிஐ சம்மனால் செந்தில் பாலாஜி பதறுகிறார்" அண்ணாமலை விமர்சனம்



கரூர், மார்ச்.16–

கரூர் விவகாரத்தில் மடியில் கனமிருப்பதால் செந்தில்பாலாஜி சிபிஐ விசாரணைக்கு பதறுகிறார் என பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கூறினார்.

பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: விளாத்திக்குளத்தில் 17 வயது சிறுமிக்கு நடந்த கொடூர சம்பவத்துக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. புகார் தெரிவித்த உடனேயே, போலீஸார் விசாரித்து நடவடிக்கை எடுத்திருந்தால் சிறுமி உயிரிழப்பை தடுத்திருக்கலாம்.

திமுக கூட்டணியில் விசிக, கம்யூனிஸ்ட்கள் வருத்தத்துடன் உள்ளனர். திமுக கூட்டணிக்குள் சலசலப்புகள் எழுந்துள்ளன. தமிழக அரசியல் களத்தில் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ட்விஸ்ட் இருக்கும். இந்த முறையும் அதை எதிர்பார்ப்போம். நாங்கள் எங்களது டைம் லைனில் சரியாக செல்கிறோம். கரூர் விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை கேட்டது தவெக. சிபிஐயை வைத்து தவெகவை பயமுறுத்துகின்றனர் என்பதை ஏற்க முடியாது.

முதல்வரின் கவனம் சட்டம் ஒழுங்கு, தமிழக நலனில் இல்லை. ரீல்ஸ் போடும் முதல்வராக மாறி விட்டார். கரூர் விவகாரம் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் விசாரணைக்கு செந்தில் பாலாஜியை அழைத்துள்ளனர். அவரை அழைத்து விசாரிக்க வேண்டியது சிபிஐ கடமை. சிபிஐ செந்தில்பாலாஜியை அழைப்பது சரியானது. அவர் மடியில் கனமிருப்பதால் பதறுகிறார். மடியில் கனம் இல்லை என்றால் சென்று பேச வேண்டியது தானே. சிபிஐ விசாரணைக்கு செந்தில்பாலாஜி ஒத்துழைக்க வேண்டும்.

விஜய் குறித்த என் கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. நாங்கள் வேறு சித்தாந்தம். அவர்கள் வேறு சித்தாந்தம். இருப்பினும் அரசியல் கூட்டணிக்குள் முரண்பாடான கட்சிகள் உண்டு. பொது எதிரியை வீழ்த்த ஒன்று சேர்ந்தது உண்டு. தமிழகத்தில் திமுக ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் தான் அரசு இயந்திரம் செயலிழந்து, குற்றங்கள் அதிகரித்துள்ளன. திமுக தலைவர்கள் எதையோ சாதித்தது போல், தேர்தலில் வெற்றி பெற்றது போல் உள்ளனர். இது தான் அவர்களின் அழிவுக்கு அஸ்திவாரம். அவர்களின் ஆணவம், அகங்காரத்தை மக்கள் ஏற்க மாட்டார்கள். முதல்வர் ஸ்டாலின் திமுக கூட்டங்களுக்கு தான் செல்கிறார். இன்னும் மக்களை சந்திக்கவில்லை. மக்களை சந்திக்க செல்லும் போது, மக்களின் எதிர்ப்பு முதல்வருக்கு தெரியவரும். இவ்வாறு அவர் கூறினார்.

# துரோகத்தின் அடையாளம் எடப்பாடி பழனிசாமி: ஓ.பன்னீர்செல்வம் காட்டம்

சிவகிரி, மார்ச்.16–

துரோகத்தின் அடையாளம் எடப்பாடி பழனிசாமி என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார். தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிவகிரியில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது.

இதில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பேசியதாவது:

துரோகத்தின் அடையாளம் எடப்பாடி பழனிசாமி. தனக்கு முதல்வர் பதவியை கொடுத்தவரை எந்த அளவுக்கு இழிவாக பேசினார் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். குறிப்பாக தென் மாவட்ட மக்களுக்கு நன்றாக தெரியும். இந்த தேர்தலில் எடப்பாடி பழனிசாமிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். ஒரு நம்பிக்கை துரோகி அரசியலில் இருக்கக்கூடாது. நன்றி மறந்தவர் அரசியலில் இருக்கக்கூடாது என்ற நல்ல தீர்ப்பை வழுங்குங்கள். எந்த நிலையிலும் பழனிசாமி என்ற நபர் தமிழகத்தில் எந்த பொறுப்புக்கும் வரக்கூடாது என்ற நிலையை 2021ல் இந்தப்பகுதி மக்கள் எடுத்தனர்.

நான் ஜெயலலிதாவிடம் எப்போதும் பதவி கேட்டதில்லை. அவர் பார்த்து பார்த்து தான் செய்தார். ஒருவர் ஆற்றுகிற பணியை பொறுத்து பதவியை வழங்குவார். நான் சாதாரண தொண்டனாக தான் வந்தேன். ஒரு டீக்கடை தான் நடத்தி வந்தேன். உங்களிடம் ஒருவனாக இருந்த என்னை முதலமைச்சராக ஆக்கியது ஜெயலலிதா. தமிழகத்தில் தற்போதையை திமுக ஆட்சியில் அனைவருக்கும் சமமான கல்வி, சமூக நீதி உடன் கிடைத்திருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக பட்டதாரிகளின் சதவீதம் 52% உயர்ந்திருக்கிறது என்றால் அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த சிறப்பான திட்டங்கள் தான் காரணம். இவ்வாறு அவர் பேசினார்.




# தேர்தல் நடத்தை விதிகள் மாலை முதல் அமலுக்கு வர உள்ள நிலையில், பழனியில் வாகன சோதனை

பழனி, மார்ச்.16–

தேர்தல் நடத்தை விதிகள் இன்று மாலை முதல் அமலுக்கு வர உள்ள நிலையில், பழனியில் காவல்துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர். துணை ராணுவப் படையினர் உடன் இணைந்து சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

# வேளச்சேரி பரங்கிமலை தடத்தில் ரயில் சேவை தொடங்கியது தென் சென்னை மக்களின் கனவு திட்டம் நிறைவேறியது





தென் சென்னை, மார்ச்.16–

தென் சென்னை மக்களின் நீண்ட நாள் கனவு திட்டமான, வேளச்சேரி பரங்கிமலை தடத்தில் மின்சார ரயில் சேவை நேற்று தொடங்கியது. இதனால் பல முக்கிய இடங்களுக்கு எளிதில் செல்ல முடியும் என மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சென்னை கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தில், தினசரி 80க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இம்மார்க்கத்தில் வேளச்சேரி பரங்கிமலை இடையிலான 5 கி.மீ. தொலைவை இணைக்கும் வகையில், பறக்கும் ரயில் வழித்தட திட்டப்பணி, 2008ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆனால், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகரில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினையால் பணிகள் முடங்கின. பின்னர் 2021ம் ஆண்டுக்குப் பிறகு, பணிகள் மீண்டும் தொடங்கின.

கடந்த 17 ஆண்டுகளாக நடந்து வந்த ரயில் இணைப்பு பணிகள் முடிவடைந்து, பல்வேறு கட்ட சோதனைகளுக்குப் பிறகு நேற்று பயணிகள் போக்குவரத்து சேவை தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, பரங்கிமலையில் இருந்து வேளச்சேரி வழியாக கடற்கரைக்கு முதல் மின்சார ரயில் சேவை நேற்று அதிகாலை 5 மணிக்கு தொடங்கியது. இந்த ரயிலில் ரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், கீழ்கட்டளை, மடிப்பாக்கம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பயணிகள், சமூக ஆர்வலர் கள், பல்வேறு குடியிருப்போர் நலச்சங்கத்தை சேர்ந்தவர்களும் பயணித்தனர்.

இம்மார்க்கத்தில் இயக்கப்பட்ட மின்சார ரயிலில் பயணம் செய்ய புழுதிவாக்கத்தைச் சேர்ந்த வி.ராஜசேகர், ஜி.சிவக்குமார். எம். அருள் தினகர் ஆகியோர் கூறியதாவது: இந்த ரயில் சேவையை நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்தோம். இப்போது நிறைவேறியுள்ளது, மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் உள்பட சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நேரடி யாக ரயில் சேவை இல்லாமல் இருந்தது. தற்போது, வேளச்சேரி பரங்கிமலை ரயில் தடம் இணைப்பு மூலமாக, சென்னையில் சென்ட்ரல், எழும்பூர், கோயம்பேடு, தாம்பரம் என பல முக்கிய இடங்களுக்கு எளிதாகச் செல்ல முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

அறிவிப்பு பலகை வேண்டும்: வேளச்சேரி ஏஜிஎஸ் காலனி குடியிருப்போர் நலச்சங்க செயலாளர் கீதா கணேசன் மற்றும் சங்க நிர்வாகிகள் ரயிலில் பயணித் தனர். புதிய ரயில் சேவை குறித்து. கீதா கணேசன் கூறும்போது. "எங்களின் நீண்ட கால கோரிக்கை நிறைவேறியுள்ளது. வேளச்சேரி வழியாக சென்னை கடற்கரைக்கு பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக, பரங்கிமலை நிலையத்தில் ஆங்காங்கே அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

அதேபோல் புழுதிவாக்கம் ரயில் நிலையத்திலும் வைக்க வேண்டும், மேலும் அங்கு அமைக்கப்பட்டு வரும் நகரும் படிக்கட்டு பணியை விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். இது தவிர, ஆதம்பாக்கம் ரயில் நிலைய பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டும்" என்றார்.

முதல் நாளில் ரயில்கள் அட்டவணைப்படி இன்றி காலதாமத மாக இயக்கப்பட்டதால் பயணிகள் அவதியடைந்தனர். எனவே, இனி ரயில்களை குறித்த நேரத்தில் இயக்குவதோடு, அனைத்து ரயில் நிலையங்களிலும் கால அட்டவணையை வைக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் பயணம்: பரங்கிமலை ரயில் நிலையத் துக்கு அமைச்சர் தா.மோ.அன் பரசன் நேற்று காலை வந்தார். அங்கிருந்து வேளச்சேரி வரை யும், மறுமார்க்கமாக பரங்கி மலை வரையும் மின்சார ரயிலில் பயணித்தார். பின்னர் அவர் கூறும் போது, "வேளச்சேரி பரங்கிமலை பறக்கும் ரயில் திட்டம் தாமதமானதற்கு அதிமுக ஆட்சியே காரணம். அவர்கள் முறையாக நிலத்தை கையகப்படுத்தி ரயில்வே துறையிடம் ஒப்படைக்க வில்லை. முன்பே திறக்க வேண்டிய திட்டம் இது. காலம் தாழ்த்தி விட்டு தற்போது அவசர கதியில் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. ரயில்வே தரப்பில் முறையாக எங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை" என்றார்.

86 ரயில் சேவைகள்: சென்னை கடற்கரை பரங்கிமலை இடையே 86 ரயில் சேவைகள் இயக்கப்பட உள்ளன. மேலும், சென்னை கடற்கரை வேளச்சேரி இடையே 4 ரயில் சேவைகளும், வேளச்சேரி பரங்கிமலை இடையே 6 ரயில் சேவைகளும் இயக்கப்படுகின்றன.

# பெட்ரோல் நிலையங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க கோரிக்கை



சென்னை, மார்ச்.16–

தமிழகத்தில் நிலவி வரும் செயற்கையான பெட்ரோல் தட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம் தமிழக டிஜிபியிடம் கோரிக்கை மனு அளித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் கே.பி.முரளி அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: உலகளாவிய சூழல்களால் ஏற்பட்டுள்ள அச்சம் காரண மாக, தமிழகத்தில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் கடந்த சில நாட்களாக மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இந்த செயற்கை தேவையால் பொது மக்கள் பலரும் பிளாஸ்டிக் கேன்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத பாத்திரங்களில் பெட்ரோல், டீசலை நிரப்ப வற்புறுத்துகின்றனர்.

பெட்ரோலிய சட்ட விதிகளின் படி, அங்கீகரிக்கப்படாத பாத்திரங்களில் எரிபொருளை விநியோகிப்பது சட்ட விரோதமானது. இது ஊழியர்களுக்கும், குடியிருப்பு பகுதிகளுக்கும் மிகப்பெரிய தீ விபத்து அபாயத்தை ஏற்படுத்தும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக கேன்களில் பெட்ரோல் வழங்க மறுக்கும் ஊழியர்களை, சில நபர்கள் தரக்குறைவாக பேசுவதும், உடல் ரீதியாகத் தாக்குவதும் அதிகரித்து வருகிறது . பல இடங்களில் இது சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இப் படி கேன்களில் எரிபொருளை வாங்கிச் செல்வது, கள்ளச்சந்தையில் எரிபொருளைப் பதுக்குவதற்கு வழிவகுக்கிறது.

கேன்களில் பெட்ரோல் வழங்க வேண்டாம் என அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், நகர்ப்புறங்களில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் கூட்டத்தை முறைப்படுத்தவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும் குறைந்தது ஒரு காவலரையாவது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# ஈரான் உச்ச தலைவர் மோஜ்தபா பற்றி தகவல் அளித்தால் ரூ.92 கோடி பரிசு

## ட்ரம்ப் நிர்வாகம் அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச்.16–

ஈரான் உச்ச தலைவர் மோஜ்தபா காமேனி உட்பட சில தலைவர்கள் பற்றி தகவல் அளித்தால் ரூ.92 கோடி பரிசு அளிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்ட பிறகு அவரது மகன் மோஜ்தபா காமேனி ஈரான் உச்ச தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால், இதுவரை அவர் பொதுவில் வெளியே வரவில்லை. அயத்துல்லா காமேனி தாக்கப்பட்ட போது, மோஜ்தபாவும் படுகாயம் அடைந்து கோமா நிலையில் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், அவர் உயிருடன் இருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நம்புகிறார். இந்நிலையில் மோஜ்தபா காமேனி மற்றும் ஈரானின் இஸ்லாமிக் புரட்சிப் படையுடன் தொடர்புடைய தலைவர்கள் பற்றி தகவல் அளிப்போருக்கு 10 மில்லியன் டாலர் (ரூ.92,47,48,000) பரிசு அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதில் அயத்துல்லாவுக்கு துணையாக இருந்த மத குரு அலி அஸ்கார் ஹிஜாசி, ராணுவ கமாண்டர் யஹ்யா ரகிம், அரசியல் தலைவர் அலி லாரிஜானி, உளவுத்தறை அமைச்சர் இஸ்மாயில் காதிப், பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட சில அதிகாரிகளின் பெயர்களும் உள்ளன

# நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையம்: ஜெர்மன் இந்தியா பிஸினஸ் அலையன்ஸுடன் உ.பி. அரசு ஒப்பந்தம்




புதுடெல்லி, மார்ச்.16–

உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையம் உருவாகிறது. பிராங்க்பர்ட் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள நகரங்களின் தொழில் வளரச்சி அமைப்பான 'ரைன் மெயின் இன்னவேஷன் அமைப்பு' மற்றும் தமிழர்களின் 'ஜெர்மன் இந்தியன் பிஸினஸ் அலையன்ஸுடன் (ஜிஐபிஏ)' உ.பி. அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

டெல்லி புறநகர் பகுதியான நொய்டாவில், ஆசியாவிலேயே மிகப்பெரியதாக சர்வதேச விமான நிலையம் உருவாகிறது. இது ஐரோப்பாவின் நுழைவு வாயிலாக விளங்கப் போகிறது.

இந்த சர்வதேச விமான நிலையம் முழுமையான செயல்பாட்டுக்கு வரும்போது ஆண்டுக்கு 7 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக இருக்கும். தொழில் துறையினரைப் பெருமளவில் ஈர்க்கும் விதமாக, விமான நிலையத்தைச் சுற்றி தொழில் மற்றும் தளவாடங்களை மையமாகக் கொண்ட தொகுப்புகள் (கிளஸ்டர்கள்) உருவாக்கப்படுகின்றன.

வளர்ந்து வரும் இந்த விமான மற்றும் தொழில் துறை தடத்தில் பிராங்க்பர்ட் விமான நிலைய பிராந்தியத்தை அதன் தொழில்துறை மையங்களான ரஸல்ஷீம், ரவுன்ஹைம் மற்றும் கெல்ஸ்டெர்பாக் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி சரக்கு விமானம் மற்றும் விநியோக சங்கிலி தீர்வுகள், இயந்திர பொறியியல் மற்றும் விமான நிலைய தொழில்நுட்பம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஜிஐபிஏவுடனான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 3 மாதங்களுக்குள் ஒரு கட்டமைக்கப்பட்ட செயல் திட்டத்தை உருவாக்க குழு அமைக்கப்படும். இது தொடர்பாக ஏற்கெனவே பிரதிநிதிகள், துறை சார்ந்த முயற்சிகள் மற்றும் முதலீட்டாளர்கள் என பல அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஜிஐபிஏவானது ஜெர்மனி இந்திய பொருளாதார பிராந்தியங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை செயல்படுத்துவதற்கு தேவையான உதவிகளை அளிக்கும்.

இதுகுறித்து 'இந்து தமிழ் திசை' நாளிதழிடம் ஜெர்மனிவாழ் தமிழரும் ஜிஐபிஏவின் இணை நிறுவனருமான நிர்மல் கண்ணையன் கூறுகையில், "நொய்டாவின் ஜேவரில் சர்வதேச விமான நிலையம் அமையும் பகுதி, இந்தியாவின் உலகளாவிய தொழில்துறையின் அடித்தளமாக மாறி வருகிறது. உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் பங்கேற்க விரும்பும் நிறுவனங்கள் இந்த முன்னேற்றங்களை முன்கூட்டியே புரிந்து கொண்டு நிறுவன ரீதியாக செயல்பட வேண்டும். ஜெர்மனியின் பிராங்க்பர்ட் பிராந்தியம் இந்த சூழலில் ஒரு மத்திய ஐரோப்பிய நாடுகளின் பொறுப்பை ஏற்க தொழில்துறை மற்றும் தளவாட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது.

உ.பி. அரசுடன் நாங்கள் முதல் முறையாக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். இது பிராங்க்பர்ட் பிராந்தியத்துக்கும் வட இந்தியாவின் புதிய சர்வதேச விமான நிலையத்தால் இயக்கப்படும் தொழில்துறை அமைப்புகளுக்கும் இடையிலான நேரடி பொருளாதார இணைப்புக்கான அடித்தள கட்டமைப்பை வழங்கும்" என்றார்.



# கல்வி முடிக்கும் முன்பே வேலை! 65 மாணவர்களுக்குப் பணி நியமன ஆணை

புளியங்குடி, மார்ச். 16:-

எஸ். வீராச்சாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியின் கலையரங்கத்தில், அசண்ட் சர்க்யூட் பிரைவேட் லிமிடெட் (Ascent Circuits Pvt Ltd) நிறுவனத்துடன் இணைந்து பிரம்மாண்ட வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் வீ. முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, வளர்ச்சி பிரிவு இயக்குனர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர் இந்த முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். முகாமில் அசண்ட் சர்க்யூட் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு அதிகாரிகள் சுரேஷ்குமார், நந்தகுமார் மற்றும் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டு, எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தினர்.

இம்முகாமில் சுமார் 200 மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களில் தகுதியான 65 மாணவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ஆண்டு வருமானமாக ரூபாய் 3.25 லட்சங்கள் வழங்கப்பட உள்ளது இம்முகாமின் சிறப்பம்சமாகும். மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், குறிப்பிட்ட பாடங்களுக்கான சிறப்புப் பயிற்சிகளை வழங்கவும் கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

கல்லூரி முதல்வர் இசக்கி முத்து முன்னிலையில் மாணவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை மேலாளர் தங்கப்பன் பிள்ளை, வேலைவாய்ப்பு அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



# கலைஞரின் கனவு இல்லம் முதல் புதிய சாலைகள் வரை: அவிநாசி தொகுதியில் மக்கள் பணிகளைத் முடுக்கிவிட்ட மேயர் தினேஷ்குமார்!

அவிநாசி, மார்ச். 16-

திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், மாநகராட்சி மேயருமான என். தினேஷ்குமார் அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நலத்திட்டப் பணிகளைத் துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அவிநாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளுக்கு வீடுகளுக்கான ஆணைகளை மேயர் வழங்கினார். சேவூர் அருகே உள்ள முறியாண்டம்பாளையத்தில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ரேஷன் கடையைத் திறந்து வைத்தார். கானூர் ஊராட்சி அலுவலகம் அருகே ரூ.4 கோடியே 64 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய தார் சாலைப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டித் துவக்கி வைத்தார். தத்தனூர் ஊராட்சி, சாவக்கட்டுப்பாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய நிதி என மொத்தம் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நகராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி.வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி. ஆறுமுகம். தலைமை செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி.ஒன்றிய செயலாளர்கள் சிவப்பிரகாஷ், எஸ் ஆர் பழனிச்சாமி, பால்ராஜ், நகரச் செயலாளர் திராவிடன் வசந்தகுமார், தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்ஜசி அவனாசியப்பன். தத்தனூர் ஊர ாட்சி முன்னாள் தலைவர் விஜயகுமார் மற்றும் திமுக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்



# மாநில அளவிலான மகளிர் தினக் கொண்டாட்டம்: அரசு அலுவலர் ஒன்றிய நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பு

திருச்சி, மார்ச். 16-

திருச்சி மாநகரில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் மாநில அளவிலான உலக மகளிர் தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

*சிறப்பு விருந்தினர்கள் மற்றும் வாழ்த்துரை:*

இவ்விழாவில் திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கண்ணன், மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் உதயஅருணா, செவிலியர் சங்க மாநிலச் செயலாளர் ஜெயபாரதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மாரிதாஸ், உதவி கணக்கு அலுவலர்கள் ஸ்ரீதேவி, சரண்யா மற்றும் மைதிலி ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துச் சிறப்புரையாற்றினர்.*நிர்வாகிகளின் பங்களிப்பு:*

விழாவிற்கான பயிற்சிகள் மற்றும் ஏற்பாடுகளை மாநிலத் துணைத் தலைவர்கள் பத்மினி, நந்தகுமார், மாநில மகளிரணிச் செயலாளர் கவிதா, லட்சுமி மற்றும் மண்டலச் செயலாளர்கள் கவிதா, ஹேமலதா, மகாலட்சுமி ஆகியோர் முன்னின்று நடத்தினர். பட்டிமன்றப் பேச்சாளர் பவித்ரா உள்ளிட்டோர் விழாவிற்குச் சிற சேர்த்தனர்.

*வாழ்த்து மற்றும் நன்றியுரை:*

நிகழ்வின் இறுதியில், மாநிலத் தலைவர் வெ. மகேந்திரகுமார், மாநிலப் பொதுச் செயலாளர் மாரிமுத்து மற்றும் மாநிலப் பொருளாளர் திலகர் ஆகியோர் விழாவிற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்குத் தங்களது நன்றியினைத் தெரி வித்துக் கொண்டனர்.



# சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராகும் தாமரைப்படை! உடுமலை வடக்கு ஒன்றிய பாஜக கூட்டத்தில் வியூகம்

உடுமலை, மார்ச்.16-

பாரதிய ஜனதா கட்சி உடுமலை வடக்கு ஒன்றியம், பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் அறிமுக கூட்டம், திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் மோகனப்பிரியா சரவணன் முன்னிலை வகிக்க, வடக்கு ஒன்றிய தலைவர் எம் வித்யா அவர்கள் தலைமையில் நிர்வாகிகள் அறிமுகம் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பாஜக பொறுப்பாளர்கள் வடுகநாதன், ஜோதி ஈஸ்வரி கந்தசாமி, கலா, ஜெகநாதன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் நாகமாணிக்கம், உடுமலை மண்டல தலைவர் பாலகுரு மற்றும் உடுமலை பாஜக வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட தலைவர் பேசும் பொழுது, வரும் சட்டமன்றத் தேர்தலில் பூத்து வாரியாக வாக்காளர்களை நேரில் சந்தித்து மோடி அரசின் சாதனைகளை விளக்கியும் விடியல் அரசின் அவலங்களை எடுத்துரைத்து பாஜக அதிமுக கூட்டணி கட்சிகளுடன் இணைந்து வாக்கு சேகரிக்க வேண்டுமென தெரி வித்தார்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அ தி மு க நகரச் செயலாளர் மா.ஶ்ரீதர் அவர்களது தலைமையில் தேர்தல் பணி சிறப்பாக துவங்கியது. அதிமுக நகர துணை செயலாளர் ஜாபர் சாதிக் மற்றும் நிர்வாகிகள், பாரதிய ஜனதா கட்சியின் நகரத் தலைவர் சரவணன் மற்றும் நகர பொதுச்செயலாளர் மணிவாசவன், அ ம மு க கட்சியின் நகர ச்செயலாளர் சக்திவேல், ஐ ஜே கே கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் திலீபன் மற்றும் நிர்வாகிகள், பாட்டாளி மக்கள் கட்சி, தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி, தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் மற்றும் என் டி எ கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்





# "மீண்டும் ஸ்டாலினே முதல்வர்! எடப்பாடியின் துரோகத்திற்கு மக்கள் தீர்ப்பளிப்பார்கள்" ஓபிஎஸ் ஆவேசம்

சிவகிரி, மார்ச். 16-

சிவகிரி தேவர் திருமண மண்டபத்தில், தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.எல்.ஏ. ராஜா தலைமை வகித்தார். முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் (OPS), முன்னாள் அமைச்சர் தங்கவேல், எம்பி ராணி ஸ்ரீகுமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

*ஓ. பன்னீர்செல்வம் உரையின் முக்கிய அம்சங்கள்:*

கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை கடுமையாக விமர்சித்தார். "எடப்பாடி பழனிச்சாமிக்குத் தெரிந்தது துரோகம் மட்டும்தான். தன்னை ஆளாக்கியவர்களுக்கும், பதவியில் அமர்த்தியவர்களுக்கும் துரோகம் செய்தவர் அவர். இத்தகைய நன்றி மறந்த சுயநல அரசியலை தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்," என்றார்.

மேலும் அவர் பேசுகையில், "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த ஐந்தாண்டுகளாக சமூக நீதி மற்றும் சமத்துவத்தோடு சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார். மக்கள் மீண்டும் ஸ்டாலினையே முதல்வராகத் தேர்ந்தெடுக்கத் தயாராகிவிட்டனர். உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து திமுக கூட்டணி கட்சிகளை வெற்றி பெறச் செய்ய வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் எம்பி ரவீந்திரநாத், உசிலம்பட்டி எம்எல்ஏ ஐயப்பன், கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தேமுதிக, மதிமுக ஆகியவற்றின் முக்கிய நிர்வாகிகள், திமுக மாவட்ட, ஒன்றிய மற்றும் நகரப் பொறுப்பாளர்கள் மற்றும் பெருந்திரளான தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

# திருநெல்வேலி மாவட்ட திமுக மகளிர் அணி துணை அமைப்பாளராக துடிப்புமிக்க நிர்வாகி ஆறுமுக தேவி நியமனம்

நெல்லை, மார்ச். 16-

திருநெல்வேலி மாவட்ட திமுக மகளிர் அணி துணை அமைப்பாளராக, திசையன்விளையைச் சேர்ந்த ஆறுமுக தேவி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் குறித்த அறிவிப்பு, கழகத் தலைவர் மற்றும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும், நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் கிரகாம்பெல் முயற்சியின் பேரிலும் மேற்கொள்ளப்பட்டது.



இதனைத் தொடர்ந்து, திமுக மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், ஆறுமுக தேவி அவர்களை திருநெல்வேலி மாவட்ட மகளிர் அணித் துணை அமைப்பாளராக அதிகாரப்பூர்வமாக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

கழகத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் ஆறுமுக தேவிக்கு, மாவட்டக் கழக நிர்வாகிகள், திசையன்விளை பகுதி திமுகவினர் மற்றும் தோழமைக் கட்சியினர் எனப் பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரி வித்து வருகின்றனர்.





















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000